ப.மு.COLKPM/5575/2023/ஆ4 மாவட்ட ஆட்சியர் அலுவலகம்

நாள். 24.04.2024 காஞ்சிபுரம்.

**<u>தடையின்மைச்சான்று</u>**

பொருள் தடையின்மை சான்று – காஞ்சிபுரம் மாவட்டம் – உத்திரமேரூர் வட்டம் – நெ.112.சிறுபினாயூர் கிராமம் புல எண் 177/8 மற்றும் சில புல எண்கள் – மொத்த பரப்பு 11.12.50 ஹெக்டேர் நிலம் – விவசாயம் தவிர்த்து இதர பயன்பாட்டிற்கு பயன்படுத்தி கொள்ள தடையின்மைச் சான்று கோரி திரு.மு.ஜெயகுமார் மற்றும் சில நிறுவனத்தினர் மனு செய்தது – அறிக்கை வரப்பெற்றது தடையின்மைச்சான்று வழங்குதல் – தொடர்பாக.

பார்வை

1. திரு.மு.ஜெயகுமார் மற்றும் சில நிறுவனத்தினர் மனு நாள்.22.08.2023
2. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ந.க.எண் COLKPM/5575/2023/B4 நாள் 30.08.2023.
3. உதவி இயக்கநர்/துணை இயக்குநர் (பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், காஞ்சிபுரம் கடிதம் மூ.மு.எண்.1731/2023/கா.மா.2 நாள்.18.12.2023.
4. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வே)(பொ)/ வேளாண்மை துணை இயக்குநர், காஞ்சிபுரம் கடிதம் ந.க.எண.134/2023(வே) நாள். 20.12.2023.
5. செயற்பொறியாளர் நீ.வ.து,கீழ்பாலாறு வடிநிலக்கோட்டம், காஞ்சிபுரம் கடித எண்.இவஅ2/கோ.28(NOC–சிறுபினாயூர்/ 2023 நாள்.26.12.2023.
6. உத்திரமேரூர் வட்டாட்சியர் அறிக்கை .க.2244/2023/அ1, நாள்.15.12.2023.
7. வருவாய் கோட்ட அலுவலர், காஞ்சிபுரம் அறிக்கை ந.க.5197/2023/அ1 நாள்.23.12.2023.
8. உத்திரமேரூர் வட்டார வளர்ச்சி அலுவலர் அறிக்கை ந.க.3222–2023–அ3 நாள்.20.01.2024.
9. தொடர்புடைய ஆவணங்கள்

---

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், நெ.112.சிறுபினாயுர் கிராமம் புல எண் 177/8 மற்றும் சிலவற்றில் 11.12.50 ஹெக்டேர்ஸ் நிலங்களில் விவசாயம் தவிர்த்து இதர பயன்பாட்டிற்கு பயன்படுத்திகொள்ள தடையின்மைச்சான்று கோரி திரு.மு.ஜெயகுமார் த/பெமுருகேசன், திரு.மு.சந்தீப்குமார் த/பெமுருகேசன், தி/ள்.. சமீராப வுண்டேஉ&ன்ஸ்பிரைவேட் லிமிடெட், தி/ள்.சுபக்ருபா ஹோம்ஸ் பிரமோட்டர்ஸ், தி/ள்,வாமனா லேண்ட் பிரமோட்டர்ஸ், தி/ள்,அட்வித்லேண்ட் டெவலேப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட், தி/ள்.பாவனா ரியால்டர் பிரைவேட் லிமிடெட் நிறுவனங்கள் மனு அளித்தது

தொடர்பாக, பார்வையில் காணும் சார்நிலை அலுவலர்களின் அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் தடையின்மைச்சான்று வழங்கப்படுகிறது.

தடையின்மைச்சான்று வழங்கும் புலங்கள் சிறுபினாயூர் கிராமக்கணக்குகளில் கீழ்க்கண்டவாறு தாக்கலாகியுள்ளது.

| வ,எ | புல எண் | பரப்பு | வகைபாடு | பட்டா எண்(ம) பட்டாதாரர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | 177/8 | 0.45.5 | நன்செய் | 2520.தி/ள்.அட்வித்லேண்ட்டெவலேப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் |
| 2 | 178/2 | 0.69.0 | நன்செய் | 2521.தி/ள்.அட்வித்லேண்ட்டெவலேப்பர்ஸ்பிரைவேட் லிமிடெட் |
| 3 | 178/3 | 0.27.5 | நன்செய் | |
| 4 | 178/5 | 0.28.0 | நன்செய் | 2518.அட்வித்லேண்ட்டெவலேப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் |
| 5 | 281/1 | 0.02.5 | நன்செய் | 2411.திரு.ஜெயகுமார் |
| 6 | 281/3 | 0.32.5 | நன்செய் | |
| 7 | 281/4 | 0.54.0 | நன்செய் | 2443.திரு.சந்தீப்குமார் |
| 8 | 281/5 | 0.37.0 | நன்செய் | |
| 9 | 281/6 | 0.06.0 | நன்செய் | |
| 10 | 281/7 | 006.5 | நன்செய் | |
| 11 | 282/1 | 1.14.5 | நன்செய் | 2411.திரு.ஜெயகுமார் |
| 12 | 283/2 | 0.14.0 | நன்செய் | 2443.திரு.சந்தீப்குமார் |
| 13 | 283/3 | 0.24.5 | நன்செய் | |
| 14 | 283/5A | 0.23.0 | நன்செய் | 2521. தி/ள்.அட்வித் லேண்ட்டெவலேப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் |
| 15 | 283/5B | 0.34.5 | நன்செய் | 2505. தி/ள். சுபக்ருபா ஹோம்ஸ் பிரைவேட் லிமிடெட் |
| 16 | 283/5C | 0.12.5 | நன்செய் | 2521. தி/ள்.அட்வித்லேண்ட்டெவலேப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் |
| 17 | 283/6 | 0.21.5 | நன்செய் | 2443.திரு.சந்தீப்குமார் |
| 18 | 283/8A | 0.43.5 | நன்செய் | 2505. தி/ள். சுபக்ருபா ஹோம்ஸ் பிரைவேட் லிமிடெட் |
| 19 | 283/8B | 0.10.5 | நன்செய் | 2521. தி/ள்.அட்வித்லேண்ட் டெவலேப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் |
| 20 | 284/4 | 0.20.5 | நன்செய் | 2505. தி/ள். சுபக்ருபா ஹோம்ஸ் பிரைவேட் லிமிடெட் |
| 21 | 284/5 | 0.37.5 | நன்செய் | |
| 22 | 284/7 | 0.35.0 | நன்செய் | 2505. தி/ள். சுபக்ருபா ஹோம்ஸ் பிரைவேட் லிமிடெட் |
| 23 | 284/9A | 0.09.5 | நன்செய் | |
| 24 | 284/9B | 0.05.5 | நன்செய் | |
| 25 | 284/9C | 0.05.0 | நன்செய் | |
| 26 | 285/1 | 0.05.5 | நன்செய் | 2548. தி/ள்,வாமனாலேண்ட்பிரமோட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் |
| 27 | 285/3 | 0.39.0 | நன்செய் | |

| | | | | |
|---|---|---|---|---|
| 28 | 285/5 | 0.19.5 | நன்செய் | |
| 29 | 285/6 | 0.13.0 | நன்செய் | |
| 30 | 302/13 | 0.14.5 | நன்செய் | 2505. தி/எ். சுபக்ருபா ஹோம்ஸ் பிரைவேட் லிமிடெட் |
| 31 | 302/14 | 0.17.0 | நன்செய் | |
| 32 | 304/3 | 0.17.5 | நன்செய் | |
| 33 | 304/6 | 0.14.0 | நன்செய் | |
| 34 | 304/7 | 0.16.0 | நன்செய் | |
| 35 | 304/8 | 0.17.0 | நன்செய் | |
| 36 | 304/9 | 0.15.0 | நன்செய் | |
| 37 | 304/10 | 0.11.0 | நன்செய் | 2502.கேசவ் லேண்ட் ப்ரோமோட்டர்ஸ் |
| 38 | 304/11 | 0.09.0 | நன்செய் | 2505. தி/எ். சுபக்ருபா ஹோம்ஸ் பிரைவேட் லிமிடெட் |
| 39 | 304/12 | 0.10.5 | நன்செய் | |
| 40 | 304/13 | 0.16.0 | நன்செய் | |
| 41 | 304/14A | 0.12.0 | நன்செய் | |
| 42 | 304/14B | 0.10.5 | நன்செய் | |
| 43 | 305/2 | 0.67.5 | நன்செய் | 2548. தி/எ்,வாமனாலேண்ட்பிரமோட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் |
| 44 | 308/1 | 0.03.0 | நன்செய் | 2505. தி/எ். சுபக்ருபா ஹோம்ஸ் பிரைவேட் லிமிடெட் |
| 45 | 308/2 | 0.04.5 | நன்செய் | |
| 46 | 308/3 | 0.06.0 | நன்செய் | |
| 47 | 308/5 | 0.08.5 | நன்செய் | 2505. தி/எ். சுபக்ருபா ஹோம்ஸ் பிரைவேட் லிமிடெட் |
| 48 | 308/6 | 0.07.5 | நன்செய் | |
| 49 | 308/7 | 0.13.5 | நன்செய் | |
| 50 | 308/8 | 0.14.5 | நன்செய் | |
| 51 | 308/9 | 0.10.5 | நன்செய் | |
| | மொத்தம் | 11.12.50 | | |

காஞ்சிபுரம் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் நிபந்தனை .–

1. ஏரிபுறம்போக்கு பாசனவாய்க்கால்களை ஆக்கிரமிப்புகள் செய்தல் கூடாது.
2. அருகாமையிலுள்ள நீர்நிலைகளில் Sanitary / Waste Disposals போன்றவைகளால் மாசுபடுத்துதல் கூடாது.
3. உத்தேச இடத்தில் பிற உபயோகங்களுக்கு அபிவிருத்தி செய்யும் முன்னர் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும், மேற்படி நிலத்தை தொழில் நிறுவனம் அமைக்க தடையின்மைச்சான்று வழங்கலாம்.
4. மேலும், பிரஸ்தாப மனையிடத்தை சுற்றி உள்ள அரசு புறம்போக்கு வாய்க்கால் (ம) கால்வாய் ஆகியவற்றினை ஆக்கிரமிப்பு ஏதும் செய்யக்கூடாது. மேற்படி மனையிடத்தில் அபிவிருத்திகள் செய்யும்பட்சத்தில் நீர்நிலையிலிருந்து போதுமான திறவிடம் (இடைவெளி) நிலைநிறுத்தப்பட வேண்டும்.
5. உத்தேச மனையிங்களுக்கு இடையில் உள்ள தனியார் நிலங்களுக்கு சென்று வர தடையேதும் செய்தல் கூடாது.

**செயற்பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை நிபந்தனைகள் :-**

நிறுவனத்தாரின் புல எண் நிலங்களில் வெள்ள நீர் பாதிப்பு ஏற்படாமலிருக்க கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு நிறுவனத்தாரின் புல எண் நிலங்களின் மட்ட அளவுகள் படிப்படியாக ஒரே சீராக உயர்த்தப்பட வேண்டும்.

| வ. எண் | நில புல எண் | பரப்பளவு (ஹெக்டேரில்) | மனுதாரர்களின் புல எண் நிலங்களின் தற்போதைய தரைமட்ட அளவு (மீ) | மனுதாரர்களின் புல எண் நிலங்களில் மண் கொட்டி உயர்த்தப்பட வேண்டிய மட்ட அளவு | மனுதாரர்களின் புல எண் நிலங்களில் மண் கொட்டி உயர்த்தப்பட வேண்டிய உயரம் | நில உடைமைதாரர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 177/8 | 0.45.50 | (+) 28.530 | (+) 29.600 | 1.070 | M/s. Adwith Land Developers Pvt Ltd |
| 2 | 178/2 | 0.69.00 | (+) 28.480 | (+) 29.600 | 1.120 | M/s. Adwith Land Developers Pvt Ltd |
| 3 | 178/3 | 0.27.50 | | | | |
| 4 | 178/5 | 0.28.00 | | | | M/s. Adwith Land Developers Pvt Ltd |
| 5 | 281/1 | 0.02.50 | (+) 28.270 | (+) 29.600 | 1.330 | திரு.ஜெயக்குமார் |
| 6 | 281/3 | 0.32.50 | | | | |
| 7 | 281/4 | 0.54.00 | | | | திரு.சந்தீப்குமார் |
| 8 | 281/5 | 0.37.00 | | | | |
| 9 | 281/6 | 0.06.00 | | | | |
| 10 | 281/7 | 0.06.50 | | | | |
| 11 | 282/1 | 1.14.00 | (+) 28.330 | (+) 29.600 | 1.270 | திரு.ஜெயக்குமார் |
| 12 | 283/2 | 0.14.00 | (+) 28.340 | (+) 29.600 | 1.260 | திரு.சந்தீப்குமார் |
| 13 | 283/3 | 0.24.50 | | | | |
| 14 | 283/5A | 0.23.00 | | | | M/s. Adwith Land Developers Pvt Ltd |
| 15 | 283/5B | 0.34.50 | | | | M/s. Subhakripa Homes Pvt Ltd |
| 16 | 283/5C | 0.12.50 | | | | M/s. Adwith Land Developers Pvt Ltd |
| 17 | 283/6 | 0.21.50 | | | | திரு.சந்தீப்குமார் |
| 18 | 283/8A | 0.43.50 | | | | M/s. Subhakripa Homes Pvt Ltd |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 19 | 283/8B | 0.10.50 | | | | M/s. Adwith Land Developers Pvt Ltd |
| 20 | 284/4 | 0.20.50 | (+) 28.370 | (+) 29.600 | 1.230 | M/s. Subhakripa Homes Pvt Ltd |
| 21 | 284/5 | 0.37.50 | | | | |
| 22 | 284/7 | 0.35.00 | | | | M/s. Subhakripa Homes Pvt Ltd |
| 23 | 284/9A | 0.09.50 | | | | |
| 24 | 284/9B | 0.10.50 | | | | |
| 25 | 284/9C | 0.05.00 | | | | |
| 26 | 285/1 | 0.05.50 | (+) 28.660 | (+) 29.600 | 0.940 | M/s. Vamana Land Promoters Pvt Ltd |
| 27 | 285/3 | 0.39.00 | | | | |
| 28 | 285/5 | 0.19.50 | | | | |
| 29 | 285/6 | 0.13.00 | | | | |
| 30 | 302/13 | 0.14.50 | (+) 28.200 | (+) 29.600 | 1.400 | M/s. Subhakripa Homes Pvt Ltd |
| 31 | 302/14 | 0.17.00 | | | | |
| 32 | 304/3 | 0.17.50 | (+) 28.270 | (+) 29.600 | 1.330 | M/s. Subhakripa Homes Pvt Ltd |
| 33 | 304/6 | 0.14.00 | | | | |
| 34 | 304/7 | 0.16.00 | | | | |
| 35 | 304/8 | 0.17.00 | | | | |
| 36 | 304/9 | 0.15.00 | | | | |
| 37 | 304/10 | 0.11.00 | | | | M/s. Keshav Land Promoters (Partnership) Mrs.M.Sumitha |
| 38 | 304/11 | 0.09.00 | | | | M/s. Subhakripa Homes Pvt Ltd |
| 39 | 304/12 | 0.10.50 | | | | |
| 40 | 304/13 | 0.16.00 | | | | |
| 41 | 304/14A | 0.12.00 | | | | |
| 42 | 304/14B | 0.10.50 | | | | |
| 43 | 305/2 | 0.67.50 | (+) 27.950 | (+) 29.600 | 1.650 | M/s. Vamana Land Promoters Pvt Ltd |
| 44 | 308/1 | 0.03.00 | (+) 28.090 | (+) 29.600 | 1.510 | M/s. Subhakripa Homes Pvt Ltd |
| 45 | 308/2 | 0.04.50 | | | | |
| 46 | 308/3 | 0.06.00 | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 47 | 308/5 | 0.08.50 | | | | M/s. Subhakripa Homes Pvt Ltd |
| 48 | 308/6 | 0.07.50 | | | | |
| 49 | 308/7 | 0.13.50 | | | | |
| 50 | 308/8 | 0.14.50 | | | | |
| 51 | 308/9 | 0.10.50 | | | | |
| | மொத்தம் | 11.12.50 ஹெக்டேர்ஸ் | | | | |

1. மனுதாரர்கள் மேலே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள உயரத்திற்கு முறையான மண் பரிசோதனை (Soil Test) செய்த மண்ணை கொண்டு நிரப்பப்பட வேண்டும்.

2. மனுதாரர்களின் புல எண் நிலங்களை ஒட்டி புல எண்கள். 177/1, 178/1, 281/2, 282/2, 283/7, 284/8, 308/11 மற்றும் 308/14 ஆகியவற்றில் புல எண் வரைபடம் & 'அ' பதிவேடு ஆவணங்களின்படி அரசு புறம்போக்கு "வாய்க்கால்" மற்றும் புல எண். 305/1 & 307-ல் அரசு புறம்போக்கு "ஓடை" செல்கிறது. இந்த அரசு புறம்போக்கு வாய்க்கால்கள் மற்றும் ஓடையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஏதுவாக ஆணையர், நகரம் மற்றும் ஊரகமைப்பு திட்டமிடல் மூலம் வழங்கிய சுற்றறிக்கை ROC. No. 4367 / 2019 BA2, நாள். 13.03.2019-ன் படி 3.00 மீ பக்க இடைவெளி (Set Back) வாய்க்கால் மற்றும் ஓடையை ஒட்டிய மனுதாரர்களின் புல எண் நிலங்களில் விடப்பட வேண்டும். இந்த இடைவெளி நிலப்பகுதியில் வேறு எவ்விதமான கட்டுமானங்களும் மேற்கொள்ளக்கூடாது.

3. மனுதாரர்களின் புல எண் நிலங்களின் ஊடே புல எண்கள். 177/1, 178/1, 281/2, 282/2, 283/7, 284/8, 308/11 மற்றும் 308/14 ஆகியவற்றில் புல எண் வரைபடம் & 'அ' பதிவேடு ஆவணங்களின்படி அரசு புறம்போக்கு "வாய்க்கால்" மற்றும் புல எண்கள். 305/1 & 307-ல் அரசு புறம்போக்கு "ஓடை" செல்கிறது. இந்த அரசு புறம்போக்கு வாய்க்காலினை புல எண் வரைபடத்தில் உள்ளவாறு புல எண். 177/1-ல் 4.20 மீ முதல் 5.00 மீ அகலத்திலும், புல எண். 178/1-ல் 1.20 மீ முதல் 2.00 மீ அகலத்திலும், புல எண். 281/2-ல் 1.00 மீ முதல் 10.00 மீ அகலத்திலும், புல எண். 282/2-ல் 2.00 மீ முதல் 2.40 மீ அகலத்திலும், புல எண். 283/7-ல் 2.40 மீ முதல் 4.80 மீ அகலத்திலும், புல எண். 284/8-ல் 2.00 மீ முதல் 3.60 மீ அகலத்திலும், புல எண். 308/11-ல் 4.60 மீ முதல் 6.20 மீ அகலத்திலும், புல எண். 308/14-ல் 9.00 மீ முதல் 9.90 மீ அகலத்திலும், புல எண்கள். 305/1 & 307-ல் செல்லும் அரசு புறம்போக்கு ஓடையில், வருவாய்த்துறை ஆவணங்களின்படி நீர் தடையின்றி செல்லும் வகையில் பராமரிக்கப்பட வேண்டும். மேலும், மனுதாரர் தன் நிலங்களை அணுகிட இடையில் செல்லும் வாய்க்காலினை கடந்து செல்ல சிறுபாலம் அமைக்க தேவைப்படின், சிறுபாலம் அமைத்துக்கொள்ள இத்துறையிடம் தனியே விண்ணப்பித்து முறையான உரிய அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மனுதாரர்களின் புல எண் நிலங்களுக்கு அருகில் புல எண். 304/4-ல் "குட்டை" வகைபாடு கொண்ட அரசு நிலம் உள்ளது வருவாய்த்துறையின் 'அ' பதிவேட்டின்படி தெரியவருகிறது. இந்த "குட்டை" வகைபாடு கொண்ட அரசு நிலத்தில் எவ்வித ஆக்கிரமிப்புகளும் மேற்கொள்ளக்கூடாது.

5. மனுதாரர்களின் புல எண் நிலங்களுக்கு அருகில் புல எண்கள். 282/3, 308/10, 308/13 & 310-ல் **"அனாதீனம்"** வகைபாடு கொண்ட அரசு நிலம் உள்ளது வருவாய்த்துறையின் 'அ' பதிவேட்டின்படி தெரியவருகிறது. இந்த **"அனாதீனம்"** வகைபாடு கொண்ட அரசு நிலத்தில் எவ்வித ஆக்கிரமிப்புகளும் மேற்கொள்ளாமல் அந்நிலங்களுக்கு உரிய வகையில் பாசன வசதி செய்து தரப்பட வேண்டும்.

6. மனுதாரர்கள் பிறர் நிலங்களுக்கு பாசன நீர் செல்வதை எவ்விதத்திலும் தடை செய்ய கூடாது. மேலும், கீழே உள்ள விளைநிலங்களுக்கு பாசன நீர் செல்வதற்கான உரிய வழிவகை மனுதாரர்களால் ஏற்படுத்தி தரப்பட வேண்டும்.

7. மனுதாரர்களுக்கு சொந்தமான புல எண் நிலங்களில் பொழியும் மழையால் கிடைக்கப்பெறும் வெள்ள மழைநீரினை வெளியேற்றிட மனுதாரர்கள் தங்களது புல எண் நிலத்தினை சுற்றியும் **2.00 மீ x 0.90 மீ** என்ற அளவுகளில் கான்கிரீட் பெருவடிகால் கால்வாயும் (Macro Drain) உத்தேச குடியிருப்பு மற்றும் பல்வேறு அபிவிருத்தி பணிகளுக்காக பயன்படுத்துவதற்கு அச்சாலைகளில் மழைநீர் சிறு வடிகால்வாயும் (Micro Drain) அமைத்து அதனை அருகில் செல்லும் ஓடையுடன் இணைக்கப்பட வேண்டும்.

8. மனுதாரர்களுக்கு சொந்தமான புல எண் நிலத்திற்கு கீழே பிறருக்கு சொந்தமான நிலங்கள் இருப்பதால், அவர்களின் விளை நிலங்களுக்கு இடு பொருட்களை எடுத்துச் செல்லவும், நிலங்களை பார்வையிட சென்று வருவதற்கும் மனுதாரர்கள் தடை ஏதும் செய்யக்கூடாது.

9. மனுதாரர்களின் புல எண் நிலத்தில் அமைக்கப்படவுள்ள குடியிருப்பு மற்றும் பல்வேறு அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளும்பொழுது கட்டிடங்களிலிருந்து வெளியேறும் கழிவு நீரை அருகிலுள்ள நீர் நிலைகளில் விடக்கூடாது. மனுதாரர்களின் நிலத்திலேயே அவர்களது சொந்த செலவில் கழிவுநீர் உட்கட்டமைப்பு அமைக்கப்பட வேண்டும். மேலும், உத்தேச பிற பல்வேறு அபிவிருத்தி பயன்பாட்டு பணியில் பெருவடிகால் மற்றும் மழைநீர் கால்வாய்களின் வழியாக எதிர்காலத்தில் கழிவுநீர் அருகிலுள்ள ஓடையில் சென்றடையாத வண்ணம் அப்பகுதி உள்ளாட்சி அமைப்பின் மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும்.

10. மனுதாரர்களின் புல எண் நிலங்களில் கட்டப்படும் கட்டிடங்களில் விழும் மழைநீரை சேமிக்க உரிய மழைநீர் சேகரிக்கும் கட்டமைப்பு வசதியை மனுதாரர்களின் புல எண் நிலத்தில் மனுதாரர்களின் சொந்த செலவிலேயே அமைக்கப்பட வேண்டும்.

11. மனுதாரர்கள் அளித்துள்ள நில விவர ஆவணங்களின்படி தடையின்மை சான்று வழங்க இந்த தொழில்நுட்ப அறிக்கை பரிந்துரை செய்யப்படுகிறது. மனுதாரர்களால் அளிக்கப்பட்ட ஆவணங்களின் உண்மை தன்மைக்கு மனுதாரர்களே முழு பொறுப்பு ஆவார்கள்.

12. மனுதாரர்களின் புல எண் நிலத்தில் வருவாய்துறை மூலம் நில அளவை செய்து நீர்வளத்துறையின் முன்னிலையில் "ஏரிகள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்பு சட்டம் 2007"-ன் படி எல்லை கற்கள் 30மீ- க்கு ஒரு கல் வீதம் மற்றும் வளைவு பகுதியில் ஒரு கல் பதித்து ஆக்கிரமிப்பு ஏதும் செய்யாமல் தொடர்ந்து பராமரிக்கப்பட வேண்டும்.

13. எதிர்காலத்தில் நீர்வளத்துறை அலுவலர்கள் ஆய்வு செய்யவரும் போது மனுதாரர்கள் தடையேதும் செய்யக்கூடாது.

14. மனுதாரர்களின் நிலத்தில் குடியிருப்பு மற்றும் பல்வேறு அபிவிருத்தி பணிகளுக்காக பயன்படுத்துவதற்கு நில வகைபாடு மாற்றம் செய்திட தொழில்நுட்ப ரீதியிலான இந்த அறிக்கையானது நிபந்தனைகளின் அடிப்படையில் மட்டுமே வழங்கப்படுகிறது. மனுதாரர்கள் இந்த நிபந்தனைகளை தவறாமல் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும். மேலும், மனுதாரர்கள் இந்த நிபந்தனைகளை நிறைவேற்றாத பட்சத்தில் இந்நிலத்திற்கு பிற்காலத்தில் ஏற்படக்கூடிய எவ்வகையான பாதிப்பிற்கும் நீர்வளத்துறை எவ்வித்திலும் பொறுப்பேற்காது.

15. மேற்காணும் மனுதாரர்களின் நிலங்களில் அனுமதிக்கப்படும் மட்ட அளவிற்கு மண் கொட்டி உயர்த்தப்பட வேண்டியதும், அந்நிலங்களில் கிடைக்கப்பெறும் மழைநீரினை வெளியேற்றிட அமைக்கப்பட வேண்டிய மழைநீர் வடிகால்வாயினை அதன் அளவு மாறாமல் தவறாமல் கடைபிடிக்கப்பட வேண்டும். இந்நிபந்தனைகளை கடைபிடிக்கத் தவறும் பட்சத்தில் இதனால் ஏற்படும் விளைவுகளுக்கு நீர்வளத்துறை பொறுப்பேற்காது. எனவே, இந்நிபந்தனைகள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளதா என்பதனை வரைபட அனுமதி ஒப்புதல் அளிக்கும் முன் சம்பந்தப்பட்ட துறை உறுதி செய்து கொள்ளப்பட வேண்டும் எனவும் இதனால் ஏற்படும் இழப்பீட்டிற்கு நீர்வளத்துறை எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.

## <u>பொதுவான நிபந்தனைகள்</u>

| | |
|---|---|
| 1 | மனுதாரர் தடையின்மைச் சான்று கோரும் புலம் தற்போதுள்ள சாலையை விட அதிக உயரத்தில் இருக்க வேண்டும். |
| 2 | மனுதாரர் தனது சொந்த இடத்திலேயே போதிய வடிகால் வசதிகள் மற்றும் கழிவுநீர் கால்வாய்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் பிரஸ்தாப புலம் தாழ்வாக இருக்கும்பட்சத்தில் அதனை நீர் சூழாதவாறு அமைத்துக் கொள்ள வேண்டும். |
| 3 | மனுதாரரால் முன்மொழியப்பட்ட கட்டுமானத்தை மாற்றுவதற்கு முன்பு சம்மந்தப்பட்ட பொதுப்பணித்துறை மற்றும் நீர்வள ஆதாரத்துறைக்கு முன்னரே அறிவிப்பு வழங்க வேண்டும். |
| 4 | கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளும் போது ஏற்படும் குப்பைகள் / இடிபாட்டுப் பொருட்களை பொது இடங்களில் கொட்டாமல் சொந்த இடத்திலேயே சேகரித்து முறையாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய விதிமுறைகளின்படி வெளியேற்றப்பட வேண்டும். |
| 5 | அங்கீகரிக்கப்பட்ட பொறியாளரிடமிருந்து பெறப்பட்ட கட்டட வடிவமைப்பின்படி முறையாக மண் பரிசோதனை செய்து மண்ணின் தன்மைக்கேற்ப பொருத்தமான அடித்தளத்தினை அமைத்து கட்டடம் கட்டப்பட வேண்டும். |
| 6 | மனுதாரரின் புல எண்களில் அமைக்கப்படவுள்ள கட்டிடங்களிலிருந்து வெளியேறும் கழிவு நீரை அருகில் உள்ள மழைநீர் சேகரிப்பு தொட்டி மற்றும் ஓடையில் கலக்காதவாறும் சம்மந்தப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரிகளிடம் |

| | |
|---|---|
| | முறையான வழிமுறைகளைப் பெற்று நிறுவனத்தாரின் நிலத்திலேயே தனது சொந்த செலவில் கழிவு நீர் உட்கட்டமைப்பு அமைக்கப்பட வேண்டும். |
| 7 | மனுதாரர் தடையின்மைச்சான்று கோரியுள்ள புலஎண்ணில் வருவாய்த்துறை மற்றும் பொதுப்பணித்துறை ஆவணங்களில் உள்ள அளவுகளின் படி வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள வேண்டும். அருகில் அரசு புறம்போக்கு கால்வாய்/ஓடை ஏதேனும் இருப்பின் ஆக்கிரமித்தல் கூடாது. |
| 8 | மனுதாரர் தடையின்மைச் சான்று கோரும் புலம் கால்வாய், ஏரி போன்ற நீர்நிலைகளை ஒட்டி அமையும் பட்சத்தில் நிறுவனத்தார் சொந்த செலவில் அவருடைய சொந்த இடத்தில் சுவர் எழுப்ப வேண்டும். அரசு அதிகாரிகள் அவ்வப்போது ஆய்வு செய்ய வரும்போது தடையேதும் ஏற்படுத்தக் கூடாது. |
| 9 | மனுதாரர் கோரும் புல எண்ணிற்கு அருகில் பொதுப்பணித்துறை ஏரிகள் இருப்பின், கட்டட பணிகள் மேற்கொள்ளும் போது மேற்படி நீர்நிலைகளுக்கு எவ்வித சேதமும் ஏற்படுத்திவிடக் கூடாது. பொதுப்பணித்துறை கால்வாயினை கடந்து பணிகளை மேற்கொள்ளும் போது அத்துறையின் அனுமதி பெறப்பட வேண்டும். |
| 10 | மனுதாரர் கோரும் புல எண்ணிற்கு இடையே இருக்கும் கால்வாய்களை தனது சொந்த செலவில் பராமரிக்க வேண்டும். வருவாய்த் துறை பதிவேடுகளின்படி எந்த ஒரு ஆக்கிரமிப்புகளும் இல்லாமல் கால்வாய்களின் நீள அகலத்தை பராமரிக்க வேண்டும். பிரஸ்தாப புலத்திற்குள் இருக்கும் கால்வாய்களின் வழியாக நீர் செல்வதற்கு எவ்வித தடையும் இல்லாமல் தேவையான ஏற்பாடுகளை கட்டுமான வேலைகள் முடிந்த பின்னரும் தனது சொந்த செலவில் செய்ய வேண்டும். |
| 11 | தற்போதுள்ள அரசு விதிமுறைகளின்படி சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் முன் அனுமதி பெற்று ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட வேண்டும். அவ்வாறு அமைக்கப்படும் ஆழ்துளை கிணறுகள் விவசாய நீர்நிலைகளை பாதிக்கப்படாதவாறு அமைக்கப்பட வேண்டும். |
| 12 | கடும் வெள்ள காலங்களில் மழைநீர் பிரஸ்தாப புலத்தில் தேங்காதவாறு வெளியேற்றும் வகையில் தடையின்மைச் சான்று கோரும் புலத்தினைச் சுற்றி உறுதியான கல்வெட்டுகள் மற்றும் கால்வாய்கள் அமைத்து மழைநீரை வெளியேற்ற வேண்டும். |
| 13 | மனுதாரருக்கு வழங்கப்பட்ட அனுமதியை வேறு எவருக்கும் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ மாற்ற அனுமதி கிடையாது. எதிர்காலத்தில் ஏதேனும் ஆவணங்கள் போலியானவை என கண்டறியப்பட்டால், எவ்வித முன்அறிவிப்பும் இன்றி இத்தடையின்மைச் சான்று ரத்து செய்யப்படும். |
| 14 | இத்தடையின்மைச் சான்றில் குறிப்பிடப்பட்டுள்ள புலங்களில் எவையேனும் நில எடுப்பு, தமிழ்நாடு நில உச்சவரம்பு, நில சீர்திருத்த சட்ட விதிமுறைகளுக்கு உட்படுமாயின் இத்தடையின்மைச் சான்றும் அதற்கு உட்பட்டதாகும், |

| | |
|---|---|
| 15 | மேற்படி நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் இத்தடையின்மைச் சான்றினை எப்பொழுது வேண்டுமானாலும் இரத்து செய்ய மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அதிகாரம் உண்டு, |
| 16 | தடையின்மை சான்று கோரும் புலங்களில் பின்வரும் காலங்களில் நீதிமன்ற வழக்கு ஏதேனும் இருக்கும் பட்சத்தில் இத்தடையின்மைச்சான்று நீதிமன்ற தீர்ப்புக்கு உட்பட்டதாகும் |
| 17 | இச்சான்று அரசாணை எண்,302 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 29,12,2010 மற்றும் இயக்குநர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி சென்னை 2 சுற்றறிக்கை ந.க,24935/2010/ஜிஆர் நாள்,7,3,2011ல் குறிப்பிட்டுள்ளவாறும், மேற்படி நிபந்தனைகள் அடிப்படையிலும், நன்செய் நிலங்களை வணிக பயன்பாட்டிற்கும் மற்றும் பல்வேறு பிற பயன்பாடுகளுக்காகவும் பயன்படுத்திக்கொள்ள மட்டுமே தடையின்மைச் சான்று வழங்கப்படுகிறது. மேற்படி நிலங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி பணிகளுக்கு சம்மந்தப்பட்ட துறையினரிடம் அரசு விதிகளின்படி விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும். |

## சிறப்பு நிபந்தனைகள்

1) தடையின்மைச்சான்று கோரும் புல எண் நிலங்களை ஒட்டிய புல எண்கள். 177/1, 178/1, 281/2, 282/2, 283/7, 284/8, 308/11 மற்றும் 308/14 ஆகியவற்றில் அரசு புறம்போக்கு "வாய்க்கால்" செல்வதில் ஆக்கிரமிப்பு ஏதும் செய்யாமல் தொடர்ந்து வாய்க்காலாகவே பராமரிக்க வேண்டும்.

2) மனுதாரர்களின் புல எண் நிலங்களின் ஊடே அரசு புறம்போக்கு வாய்க்கால் செல்வதில் ஆக்கிரமிப்பு ஏதும் செய்யாமல் தொடர்ந்து வாய்க்காலாகவே பராமரித்து மனுதாரரது நிலங்களை அணுகிட இடையில் செல்லும் வாய்க்காலினை கடந்து செல்ல சிறுபாலம் அமைத்துக்கொள்ள சம்மந்தப்பட்ட துறையிடம் தனியே விண்ணப்பித்து முறையான உரிய அனுமதி பெற வேண்டும்.

3) மனுதாரர்களின் புல எண் நிலங்களுக்கு அருகில் புல எண். 304/4-ல் "குட்டை" உள்ளது. அதில் ஆக்கிரமிப்புகள் ஏதும் செய்யாமல் அதன் தன்மை மாறாமல் பராமரிக்க வேண்டும்.

4) மனுதாரர்கள் தடையின்மைச்சான்று கோரும் புல எண் நிலங்களுக்கு அருகில் புல எண்கள். 282/3, 308/10, 308/13 & 310-ல் "அனாதீனம்"

வகைபாடு கொண்ட அரசு நிலத்தில் எவ்வித ஆக்கிரமிப்பும் மேற்கொள்ள கூடாது.

5) தடையின்மைச்சான்று கோரும் புலத்தில் உள்ள உயர் மற்றும் தாழ் மின்னழுத்த கம்பங்களை மனுதாரர் உரிய துறையிடம் விண்ணப்பித்து அவரது சொந்த செலவிலேயே மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும்.

6) தடையின்மைச்சான்று கோரும் புல எண்களுக்கு மத்தியில் அமைந்துள்ள தனிநபர்களின் பட்டா புலங்களுக்கு செல்ல DTCP விதிமுறைகளின்படி உரிய பாதை வசதி ஏற்படுத்தி தர வேண்டும்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
காஞ்சிபுரம்.

பெறுநர்
திரு.மு.ஜெயகுமார்
திரு. மு.சந்தீப்குமார்
தி/ள் சமீரா பவுண்டேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்,
தி/ள் சுபக்ருபா ஹோம்ஸ் பிரைவேட் லிமிட்டெட்,
தி/ள் வாமனா லேண்ட் பிரைவேட் லிமிடெட்,
தி/ள் அட்வித் லேண்ட் டெவலெப்பர்ஸ் பிரைவேட் லிமிட்டெட்,
தி/ள் பாவனா ரியல்டர் பிரைவேட் லிமிடெட்,
6/11, மகாலிங்கபுரம் தெரு,
மகாலிங்கபுரம், நுங்கம்பாக்கம், சென்னை –600 034.

நகல்.;–
1. வருவாய் கோட்டாட்சியர், காஞ்சிபுரம்.

2.செயற்பொறியாளர், (நீ.ஆ.து)
கீழ்பாலாறு வடிநிலக் கோட்டம், காஞ்சிபுரம்.

3.மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வே)/
வேளாண்மை துணை இயக்குநர், காஞ்சிபுரம்.

4.துணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், காஞ்சிபுரம்.

5.வட்டாட்சியர், உத்திரமேரூர்.

6.வட்டார வளர்ச்சி அலுவலர், உத்திரமேரூர்.